நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள். 31.08.2020.

## இயல்புக்கூட்டம்

அன்புடையீர்,

2020ம் வருடம் ஆகஸ்ட் 31.08.2020ந் தேதி திங்கள் கிழமை முற்பகல் காலை 10.00 மணிக்கு ஆத்தூர் நகராட்சியின் இயல்புக்கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலித்து முடிவு செய்ய உள்ளது.

தனி அலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.

## பொருள்கள்

1. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN27-Q 8521 ஐ பழுது ஏற்பட்டு தொடர்ந்து வாகனத்தை இயக்க முடியாமல் உள்ளதால் மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு செய்தல் பணிக்கு ஆகும், செலவினம் ரூ.21,000/-ஆகும். தற்சமயம் நகரில் கொரோனா நோய் தடுப்பு தீவிரமடைந்துள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி விரைந்து கொரோனா கேர் சென்டருக்கு மேற்படி ஈப்பு வாகனம் பயன்படுத்தப்பட்டுவருவதால் விரைந்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பணியின் அவசர அவசிய கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதி 1920–ன்படி பிரிவு 15–ன்கீழ் மேற்படி பணிகளை செய்தற்கு தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர்பதிவு செய்யலாம்.

2.மேற்படி செலவினத்தை கொரோனா நோய் தடுப்பு அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்2103/2020/இ2)

2. ஆத்தூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2020-2021 நிதியின் கீழ் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் மேம்பாடு செய்யும் திட்டத்தின் கீழ் திட்டப்பணிகள் மேற்கொள்ள ரூ.380.00 இலட்சத்திற்கு 18.08.2020ல் E-tender முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது அதனை எதிர்த்து திரு.முகமது இஸ்மாயில் ஒப்பந்தாரர் என்பவரால் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு எண் W.P10801/2020 என்பதாகும். இது குறித்து மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. எனவே மேற்படி வழக்கினை நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு நூர்துபவுல் மௌரியா அவர்கள் ஆஜராகி வாதாடி வழக்கு முடித்து வைக்கப்பட்டது. மேற்படி வழக்கிற்கான கட்டணமாக வழக்கறிஞர் தனது 17.08.2020ம் தேதிய கடிதத்தில் வழக்கு கட்டணம் ரூ.15,000/-ஐ கோரியுள்ளார் மேற்காணும் தொகையினை வழங்க தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வழக்குதொகை ரூ.15,000/-ஐ வழங்குவதற்கு தனி அலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மேற்படி பணிக்கு தொடர்ந்துள்ள வழக்கினை ஆத்தூர் நகராட்சி சார்பாக எதிர் கொண்டு வாதாடிய வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ஆகமொத்தம் ரூ.15,000/– நகராட்சி வருவாய் நிதி/திட்ட நிதியிலிருந்து மேற்கொண்டைக்கு தனிஅலுவலர் ஏற்கலாம்

2. தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வழக்கிற்கான தொகை வழங்கியதை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம் **(1364/2020/இ1),**

3. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN27-Q 8521க்குரிய டயர்கள் 31.12.2013ல் புதியதாக வாங்கி 67341 கிலோ மீட்டர் வாகனம் இயக்கப் பட்டுள்ளதால் மேற்படி வாகனத்தின் இருடயர்கள் தேய்மானம் அடைந்து தொடர்ந்து வாகனத்தை இயக்க முடியாமல் உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு டயர்கள் இரண்டு எண்ணிக்கை புதியதாக வாங்கி பொருத்தல் மற்றும் வீல் அலெய் மெண்ட் செய்தல் பணியினை செய்ய ஆகும், செலவினம் ரூ.12,000/-ஆகும். தற்சமயம் நகரில் கொரோனா நோய் தடுப்பு தீவிரமடைந்து உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி விரைந்து கொரோனா கேர் சென்டருக்கு மேற்படி ஈப்பு வாகனம் பயன்படுத்தப்பட்டு வருவதால் விரைந்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பணியின் அவசர அவசிய கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதி 1920–ன்படி பிரிவு 15–ன்கீழ் மேற்படி பணிகளை செய்தற்கு தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனிஅலுவலர் பதிவு செய்யலாம்.

2.மேற்படி செலவினத்தை கொரோனா நோய் தடுப்பு அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்2104/2020/இ2)**

4. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN.77-B 5356ன் கிளர்ச்பிளேட் பழுது ஏற்பட்டு தொடர்ந்து வாகனத்தை இயக்க முடியாமல் உள்ளதால் மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு செய்தல் பணிக்கு ஆகும், செலவினம் ரூ.8100/–க்கு தற்சமயம் நகரில் கொரோனா நோய் தடுப்பு தீவிரமடைந்துள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி விரைந்து கொரோனா கேர் சென்டருக்கு மேற்படி ஈப்பு வாகனம் பயன்படுத்தப்பட்டுவருவதால் விரைந்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பணியின் அவசர அவசிய கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதி 1920–ன்படி பிரிவு 15–ன்கீழ் மேற்படி பணிகளை செய்தற்கு தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனிஅலுவலர்பதிவு செய்யலாம்.

2. மேற்படி செலவினத்தை கொரோனா நோய் தடுப்பு அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்2222/2020/இ2)

5. தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்–2019ன்கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.31159/2018/டிபி3, நாள்.05.03.2019ல் தெரிவித்துள்ளபடியும், அரசாணை (நிலை) எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.43, பகுதி–III,1 (a), நாள்.04.02.2019லும் மேற்படி விதிகளின் பிரிவு எண்.30(1)(2)ல் குறிப்பிட்டுள்ளவாறு ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தொடர் கட்டிடப்பகுதிகள் (Continuous Building Areas) ஆகியவற்றை கண்டறிந்து அவற்றின் சர்வே எண்கள் மற்றும் தேவையான விவரங்களை தயார் செய்து மன்ற ஒப்புதல் பெற்று நகர்ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தயார் செய்யப்பட்ட பட்டியல் தனிஅலுவலரின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்குறிப்பிட்ட தொடர் கட்டிடப்பகுதிகள் (Continuous Building Areas) மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி (EWS Areas) ஆகியவற்றிற்கான சர்வே எண்கள மற்றும் விவரங்கள் அடங்கிய பட்டியலினை தனிஅலுவலர் அனுமதிக்கலாம். (ந.க.எண்.774/2019/எப்1)

6. ஆத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் மாதத்திற்கான நாட்குறிப்பினை தனி அலுவலரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

தனிஅலுவலர் பதிவு செய்யலாம்.

3/8/2020

தனி அலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.

31/8/2020